ஜெகத்தாரணி

# செந்தமிழ் வாசகக் கைேயடு

## நான்காம் வகுப்பு

(முப்பருவப் பாடநூல் தொகுப்பு)

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்
எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

சென்னை மதுரை கோவை

*அன்னைத்தமிழே*

**உரையாடலாம் வாங்க : மொழியின் சிறப்பினைக் கூறும் வேறு பாடலை அறிந்து வந்து பாடுக.**

**கலந்துரையாடுவோம் : பள்ளிக்கு வருவதற்கு முன்பே உனக்கு பேசத் தெரியுமா? கற்றுத் தந்தது யார்? யார்? எப்படி ? யோசி.**

பள்ளிக்கு வருவதற்கு முன்பே எனக்கு பேசத் தெரியும். பேசக்கற்றுத் தந்தவள் என்னை அன்னை ஆவாள்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அன்னைத்தமிழே 2. பிறப்பு + எடுத்தேன் 3. மறந்து + உன்னை
4. சிறப்பு + அடைந்தேன்

**வினாக்களுக்கு விடையளி.**

1. சொல்லில் விளையாடச்சொல்லித் தந்தவள் தமிழ் அன்னை.
2. சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.
3. என் அன்னையாகிய தமிழே! என் உயிரில் கலந்தவளே! என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல்,என் உடன் சேர்ந்து வளர்பவளே! உன்னைப் புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன். சொல்லைக் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே!என்று ஆசிரியர் தமிழன்னைப் புகழ்கிறார்.

**இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுதுக.**

என்னை, என்னில், உன்னை, உலகில், சொல்லில், சொல்லி, சொல்லில், சொல்ல

**இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

கலந்தவளே, வளர்ப்பவளே, வளர்பவளே, தந்தவளே.

**பாடலை நிறைவு செய்வோம்**

ஏழு, நிறங்களை, மேகம், வர

*பனைமரச்சிறப்பு*

**உரையாடலாம் வாங்க : கருப்பட்டி தயாரிக்கும் விதம், நன்மை, தீமைகளை பற்றி கலந்துரையாடுக.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பழமையான 2. எளிய 3. பிரிந்து 4. குருத்து + ஓலை 5. மரம்
6. புல் 7. வாழும் இடம் 8. சாலை + ஓரம், கற்பகம் + தரு

**வினாக்களுக்கு விடையளி.**

1. நுங்கு, பதநீர், பனம்பழம், கருப்பட்டி, கற்கண்டு, முறம், விசிறி, தொப்பி, பனங்கிழங்கு, ஓலைச்சுவடி, கூடை ஆகியவை பனைமரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப்பொருள்கள் ஆகும்.
2. பனங்காய்களைக் கொண்டு வண்டி செய்து ஓட்டுவது, பனைஓலை விசிறி, பொம்மைகள், கிளுகிளுப்பை ஆகியவை சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் உதவுகிறது.

3. தமிழக இயற்கை வளத்தின் சாட்சியாக விளங்கும் பனை மரங்கள எரிபொருளுக்காக வெட்டப்படுகின்றன. மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை என்பது இன்றைய மக்களுக்குப் புரியவில்லை. ஆனால் நமது முன்னோர்கள் தெளிவாகப் புரிந்து மரம் வளர்த்தார்கள். இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனைமரம் வெட்டுவதைத் தடுக்க வேண்டும்.பனைவிதைகளை நிலத்தில் ஊன்றி அதன் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.

4. பனைமரம் நுங்கும், பனங்கிழங்கும் உணவாகப் பயன்படுகிறது. பதநீரிலிருந்து எடுக்கப்படும் கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை நோய் தீர்க்கும் குணங்கள் கொண்டவையாகவும் பயன்படுகிறது. பனைஓலைகள் கூடைமுடையவும், கைவினைப் பொருள்கள் செய்யவும், கூரை வேயவும் பயன்படுகின்றன.நமது முன்னோர்கள் பனைஓலையில் தான் நமது செந்தமிழை எழுதினார்கள். பனங்காய்களைக் கொண்டு வண்டி செய்து ஓட்டுவது, பனைஓலை விசிறி, பொம்மைகள், கிளுகிளுப்பை ஆகியவை சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் உதவுகிறது.

5. நமது முன்னோர்கள் பனை மரத்தை கேட்டதை கொடுக்கும் தேவலோகத்து மரம் எனக் கூறப்படும் கற்பகத்தருவுக்கு ஒப்பிடுவர்.

**உனது வகுப்பறையில் மற்றும் வீட்டில் பயன்படுத்தப்படும் மரத்தாலான பொருள்களைப் பட்டியலிடுக.**

நாற்காலி, மேஜை, பெட்டி, கட்டில், அலமாரி, உத்திரம், கதவு, சன்னல், முக்காலி, பூரிக்கட்டை, அலங்காரத்தாங்கி

**சொற்களை உரிய படங்களைப் பொருத்துக.**

1. நெருப்பு 2. மரம் 3. அரசன் 4. மலர் 5. பாட்டு 6. பசு

**ஒரே பொருள் தரும் சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.**

1. மதி, ஞானம், விவேகம் 2. வனப்பு, பொழில், எழில் 3. கணை,

4. கூட்டம், நெருக்கம், கும்பல், நெரிசல்

### *இலக்கணம் - பால்*

**கீழ்க்காணும் சொற்களை வகைப்படுத்துக.**

| | | |
|---|---|---|
| ஆண்பால் | : | படித்தாள், எழுதினான், குயவன், ஆசிரியர், அண்ணன் |
| பெண்பால் | : | அவன், நாட்டிய மங்கை, தங்கை |
| பலர்பால் | : | சென்றனர், விளையாடினர், மாணவர்கள், பெற்றோர் |
| ஒன்றன் பால் | : | வந்தது, வகுப்பறை, வீடு, செடி, மலர் |
| பலவின் பால் | : | பறந்தன, மேய்ந்தன, கற்கள், மரங்கள், பூக்கள் |

**பொருத்துக.**

1. அவன் எழுதினான் 2. அவள் பாடினாள் 3. அவர்கள் ஓடினார்கள்

4. அது மேய்ந்தது 5. அவை பறந்தன.

### *ஏழு இறக்கைக்குருவியும், தெனாலிராமனும்*

**பொருள் எழுதுக.**

1. வைபவம் 2. ஆச்சர்யம் 3. பக்கத்து 4. சாமர்த்தியம்

**பிரித்து எழுதுக.**

1. விழா + கோலம் 2. அரசவை + புலவர் 3. ஒட்டி + இருந்தன

**சேர்த்து எழுதுக.**

1. உத்தரவிட்டார் 2. பறவைக்கூண்டு 3. வியப்படைந்தனர்

**கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.**

1. கிருட்டிணதேவராயர் 2. விசயவர்த்தனர்

3. தங்கமஞ்சள், சிவப்பு, ஏழு வர்ணங்களிலுமாக, 4. நடுப்பகல் ஆகாமல், இருட்டு

**விடை எழுதுக.**

1. விசயநகரத்தை ஆட்சி செய்த புகழ்பெற்ற அரசர் கிருட்டிணதேவராயர்

2. விசயவர்த்தனர் தனக்குக் காலையில் தங்கமஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலுமாக உருமாறும் அற்புதக்குருவி ஒன்றைக் கொண்டு தர வேண்டும் என்று கூறினார்.

3. தெனாலிராமனின் சாதுர்யம் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டுள்ளேனே தவிர, இப்போது தான் நேரில் பார்க்கிறேன். உங்கள் அரசவைப் புலவர் உண்மையிலேயே மிகுந்த நுண்அறிவாளி தான் என்று புகழுந்ததைக் கேட்ட மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

**பெயர்ச்சொல்லின் இறுதியில் கள் சேர்த்துப் பன்மையாக்குக.**

1. யானைகள் 2. மரங்கள்

**புதிர்களுக்கான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வாழை 2. பனிக்கட்டி 3. நிலா 4.அன்னாசிப்பழம் 5. சோளம்

**படத்தைப் பார்த்துப் புதிர்அமைக்க.**

1. கிளி படம் -

2. தென்னை மரம் படம் -

**உரையாடலாம் வாங்க**

**உன்னிடம் யாராவது இது போன்ற குருவி கேட்டால் என்ன செய்திருப்பாய்? யோசித்துக் கூறுங்கள்.**

**குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடி! மணிமகுடம் சூட்டிக் கொள்**

பூ, அரசவை, இரவு நேரம், வியப்பு, அறிவுக்கூர்மை

**சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல்லை உருவாக்குக.**

தட்டு, பால், சட்டை, எட்டு, குட்டை, தட்டை, வாடு, காலை, காட்சி

*முளைப்பாரி - பாடல்*

**சிந்திக்கலாமா? மாட்டு எருவையும், ஆட்டு எருவையும் வயலுக்கு இட வேண்டும் என்று தாத்தா கூறுகிறார். ஆனால் அப்பாவோ, உடனே பலன் தருவது செயற்கை உரம் தான் என்கிறார். யார் கூறுவது சரி?**

செயற்கை உரத்தால் உடனடியாக பலன் கிடைக்கும். ஆனால் செயற்கை உரத்தைத் தொடர்ந்து பயன்படுத்தினால் அதில் உள்ள வேதிப்பொருள்கள் மண்ணின் வளத்தை அழித்துவிடுகின்றன. ஆட்டு எருவையும், மாட்டு எருவையும் முறைப்படி மண்ணில் இட்டால் மண்வளம் பெறுகிறது, மண்ணில் வளரும் நுண்ணுயிர்களும் மண் புழுக்களும் பெருகுகின்றன. இதனால் மண் எப்போதும் வளத்துடன் காணப்படுகிறது. எனவே தாத்தா கூறிய படி மாட்டு எருவையும், ஆட்டு எருவையும் வயலுக்கு இடுவதே சிறந்தது.

**பொருள் தருக.**

1. முளையிட்ட நவதானியங்கள் நிறைந்த சிறுபண்டம் 2. பெண்கள்

3. ஓலையால் முடையப்பட்ட சிறு கூடை 4. மாடு கட்டும் இடம்

5. ஆடு கட்டும் இடம்

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இரண்டு + எடுத்து 2. பொங்கல் + இட்டு 3. மணிப்பயிறு 4. செவ்வாய்கிழமை

**பிரித்தெழுதுக.**

1. சோளம் + தட்டு 2. மாடு + எரு

**இப்பாடலில் ஒரே சொல் இரண்டு முறை அடுத்தடுத்த வருவதைக் கண்டறிந்து எழுதுக.**

கணுக்கணுவா, தன்னா னன்னே, களைகளையா, தானே னன்னே

**இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**

நாளையிலே, கிழமையிலே இரண்டெடுத்து / தொண்டலிட்டு ஊறவச்சி / முறிச்சி வச்சி

அள்ளிவந்து / அள்ளி வந்து சிறுபயிறு / மணிப்பயிறு

**இப்பாடலில் இடம் பெற்றுள்ள முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.**

ஓலைக்கொட்டான் / ஓடும்பிள்ளை ஒண்ணாந்தான் / ஓசந்த வாங்கியாற்று / வாளியிலே

**மேகத்திலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைக் குடையிலுள்ள எழுத்து வழக்குச் சொற்களுடன் இணைத்துக் காட்டுக.**

முறித்து, ஊற வைத்து, உயர்ந்த, முளைக்க வைத்த, வாங்கி வந்த, செவ்வாய்

*பண்படுத்தும் பழமொழிகள்*

**சிந்திக்கலாமா? பழமொழிகளின் பொருள் மாறுபட்டு வழங்கப்பட்டுவதற்குக் காரணம் என்னவாக இருக்கும்?**

உச்சரிப்பு மாறுபாடுகளின் காரணமாக பழமொழிகளின் சொற்கள் மாறுபட்டுவிடுகின்றன. பழமொழிகள் பேச்சு வழக்கிலே அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை முறையாக எழுதப்படாததால் பல்வேறு வழிகளில் சிதைவடைகின்றன.

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கடைத்தெரு 2. கல் + சிலை 3. குண்டு + சட்டி 4. நோய் தீர்க்கும் தாவரங்கள்

5.வாழ்த்து

**கீழ்க்காணும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

1. பேசிக்கொண்டே 2. பழமொழி

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அன்பரசன் யானையிடம் ஆசி வாங்கினான்.
2. ஆநெய் என்பது பசுவின் நெய்யைக் குறிக்கிறது. பூ நெய் என்பது மலரில் உண்டாகும் தேனைக் குறிக்கிறது.
3. மூலிகையில் மருந்துகள் தயாரித்து பல நோய்களைக் குணப்படுத்தினார்கள். அதற்கு ஆயிரக்கணக்கான வேர்களைப் பயன்படுத்தினார்கள். ஆகவே ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் என்ற இப்பழமொழி வந்தது. இதுவே காலப்போக்கில் பேச்சு மாற்றத்தால் மருத்துவரை தவறாகப் பேசுவதுபோல் அமைந்தது.

**பழமொழியை சரியாக எழுதுக.**

1. யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்.
2. ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன்.
3. குன்று செடியில் குதிரை ஓட்டியது போல்.

**படத்திற்கேற்ற பழமொழியைத் தேர்வு செய்க.**

3. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்

**முதலெழுத்தை மாற்றினால் வேறு சொல்**

1. குகை, பகை, நகை
2. சிங்கம், தங்கம், அங்கம், சங்கம்
3. ஏற்றம், சீற்றம், குற்றம், முற்றம்

**இணைத்து மகிழ்வோம்**

1. குறைவாகப் பேசு அதிக வேலை செய்.
2. உழைப்பின்றி ஊதியமில்லை.
3. நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது.
4. பதறாத காரியம் சிதறாது.
5. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

**உரையாடலாம் வாங்க : இக்கதையை உனது சொந்த நடையில் கூறுக.**

ஒரு காட்டில் முயல் ஒன்று வசித்து வந்தது. அதுசுவைமிக்க கேரட்டை உண்டு மகிழ்ந்தது. அந்தக் காட்டை சிங்கம் ஒன்று ஆண்டு வந்தது. முயலுக்கு அந்த சிங்கத்தைக் காட்டை விட்டு விரட்டிவிட வேண்டும் என்ற எண்ணம் உதித்தது.

ஒரு நாள் அது கால்மேல் கால் போட்டு அமர்ந்து கொண்டிருந்தது. அங்கு வந்த சிங்கம் அதைப் பார்த்ததும் சினம் கொண்டது. உடனே அந்த முயல் இனி சிங்கம் அங்கு அரசன் கிடையாது என மற்ற விலங்குகள் கூட்டம் போட்டுத் தீர்மானம் நிறைவேற்றியதாகக் கூறியது.

தன்னையே மற்ற விலங்குகள் அரசனாக ஏற்றுக் கொண்டுள்ளதாக முயல் கூறியது. அனைத்து விலங்குகளும் தன்னைப் பார்த்து அஞ்சுவதாகவும் அது கூறியது. இதை நேரில் கண்டறிய சிங்கம் தன்னை முதுகில் ஏற்றிக்கொண்டு காட்டில் சுற்றிவர வேண்டும் என முயல் கூறியது.

அறிவு இல்லாத சிங்கம் அவ்வாறே முயலைத் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு சென்றது. சிங்கத்தின் முதுகில் முயல் இருப்பதைப் பார்த்த மற்ற விலங்குகள் அஞ்சி நடுங்கின. உடனே அந்த சிங்கம் அந்த முயல்தான் காட்டுக்கு அரசன் எனக்கூறிவிட்டு அவ்விடத்திலிருந்து ஓடி மறைந்தது. சிங்கம் காட்டில் இல்லாததால் முயல் அங்கு நிம்மதியாக வாழ நினைத்தது.

**காட்டின் அரசனாக நீ எந்த விலங்கை அமர்த்துவாய்? காரணம் என்ன?**

காட்டின் அரசனாக நான் சிங்கத்தை அமர்த்துவேன் ஏனெனில் சிங்கம் விலங்குகளில் வலிமை மிக்க விலங்காகும். அத்துடன் அது பசித்திருக்கும் போது மட்டும் தான் வேட்டையாடும். பிற நேரங்களில் மற்ற விலங்குகளை அது கொல்வதில்லை.

**சிங்கம் எதையும் ஆராயாமல் முயலின் பேச்சை உண்மை என ஏற்றுக் கொண்டது சரியானதா?**

சிங்கம் எதையும் ஆராயாமல் முயலின் பேச்சை உண்மை என ஏற்றுக் கொண்டது தவறானதாகும். தீரா விசாரிக்காமல் செய்தது மிகப் பெரிய பிழையாகும்.

**சிந்திக்கலாமா? : தவறு செய்பவர்களை என்ன செய்யலாம்? திருத்தலாமா? அப்படியே விட்டுவிடலாமா?**

தவறு செய்பவர்களை அப்படியே விட்டுவிடக்கூடாது. அவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பல + ஆண்டு  2. செயல் + ஆக்கம்  3. பயப்படுதல்  4. முன்னோர்
5. பேசியிருந்தால்  6. கடுங்கோபமான

**வினாக்களுக்கு விடையளி.**

1. காட்டின் அரசனான சிங்கம் தன் மூதாதையர்கள் பலரைக் கொன்று தின்று விட்டது. தன்னையும் அவ்வாறு ஒரு நாள் சிங்கம் கொன்றுவிடும் என்பதே முயலின் கவலையாகும்.
2. விலங்குகளின் கூட்டத்தில் 'முயலே காட்டின் தலைவன்' என்று தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது.
3. முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க, சிங்கமானது தன்னை முதுகில் தூக்கிச் செல்ல வேண்டும் எனக் கூறியது.
4. சிங்கம் காட்டை விட்டு ஓடி விட்டால் அதை மன்னித்து விடுவதாக முயல் கூறியது.
5. விலங்குகள் உண்மையில் சிங்கத்தைக் கண்டே அஞ்சின.

**எதிர்ச்சொல்லால் சொற்றொடரை நிறைவு செய்க.**

1. வெயிலில்  2. அழித்தல்  3. சத்தமாக  4. இகழ்ந்தாலும்  5. ஒற்றுமை  6. முதுமையில்

**சக்கரம் காட்டும் ஈரெழுத்துச் சொற்கள் என்ன என்பதை கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு கண்டுபிடிக்க.**

1. ஏரி  2. சரி  3. பூரி  4. கிரி  5. சரி  6. நரி  7. மாரி  8. பொரி

**எது முன்னே? எது பின்னே ? அகர வரிசைப்படுத்துக.**

தங்கம், தாவரம், திங்கள், தீபாவளி, துடைப்பம், தூக்கணாங்குருவி, தென்றல், தைப்பொங்கல், தொட்டி, தோரணம்

**உரையாடலாம் வாங்க : உனக்கு உனது நண்பன் செய்த சிறிய உதவி, அந்த நேரத்தில் பெரிதாக இருந்த அனுபவத்தைப் பற்றிப் பேசு.**

அன்று எனக்கு பள்ளியில் இறுதித்தேர்வு. மிதிவண்டியில் நான் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தேன். திடீரென எனது மிதிவண்டியின் முன் சக்கரத்தில் காற்று இறங்கி விட்டது. அதை வழியில் உள்ள கடையில் நிறுத்தி வைத்து விட்டேன். அதைச் சரி செய்தால் பள்ளிக்கு வர நெடுநேரமாகும். இதனால் நான் குழப்பத்திற்கு உள்ளானேன். தேர்வு நேரம் நெருங்கி விட்டது. அப்போது எனது நண்பன் இளங்கோ மிதிவண்டியில் சென்றுக் கொண்டிருந்தான். என் நிலையை அவனிடம் எடுத்துக் கூறினேன். என்னைத் தனது மிதிவண்டியில் ஏற்றிக் கொண்டு பள்ளியில் இறக்கி விட்டான். சரியான நேரத்தில் அவன் செய்த உதவி செய்ததால் என்னால் தேர்வு எழுத முடிந்தது.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது.

இந்தச் சிறிய உதவியை நினைக்கும் போதெல்லாம் இந்த அருமையான திருக்குறள் என் நினைவுக்கு வருகிறது.

**சிந்திக்கலாமா ? சிறு சிறு உதவிகளைப் பிறருக்குச் செய்வது பற்றி உனது கருத்து என்ன?**

சிறு சிறுஉதவிகளைப் பிறருக்குச் செய்வது மனதிற்கு ஆறுதல் அளிக்கிறது. சிறந்த எண்ணம் மேலோங்குகிறது.

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. முதிர்ந்த 2. ஆலமரம் 3.நீர்நிலை 4. குதிரை 5. பெருமை + படை 6. நிழலாகும்

**வினாக்களுக்கு விடையளி.**

1. ஆலமரத்தின் விதை மிகவும் சிறியது. இது மீன் முட்டையைக் காட்டிலும் சிறிய அளவு கொண்டதாகும்.
2. யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகியவை ஆலமரத்தின் நிழலில் தங்கும் படைகள் ஆகும்.
3. சிறிய விதை பெரிய மரமாக மாறி அனைவருக்கும் நிழல் தருகிறது. அதுபோல் நாம் செய்யும் சிறிய உதவி பிறருக்குப் பெரும் பயனைத் தருகிறது. இப்பாடலின் பொருள் சிறிய விதை பெரிய மரமாக வளர்வதுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது.

**பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

1. ஆகா! என்ன சுகம் தெரியுமா! 2. என்னைக் கட்டிப் போடுகிறார்கள்.
3. ஆகா! இது என்ன பிரமாதம்! 4. நான் என்ன வேலை செய்ய வேண்டும்?
5. காய்கறிக்கடையில் வேண்டிய தக்காளி, கத்தரி, புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன்.

**காலியிடங்களைக் கூடையில் உள்ள சொற்களைக் கொண்டு நிரப்புக.**

பல்லினை மெல்லத் தொடு : இல்லம், பகல், புல், நூல், மல்லி, கடல்
நாவினை உள்ளே தள்ளு : குளம், வெள்ளரி, குளிர், வாள், பள்ளி, கிளி
நாவினை சுழற்றி முழக்கு : சுழல், யாழ், பழம், தமிழ், பாழ், எழுத்து

**சொல் ஒன்று, பொருள் இரண்டு - கண்டுபிடி.**

1. ஆறு, ஆறு 2. 3. நூல், நூல் 4. தட்டு, தட்டு 5. கூடு, கூடு

**படகில் இருக்கும் சொற்களுள் முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை முதல் பழத்திலும், இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து இரண்டாம் பழத்தில் எழுதுக.**

முதல் பழம் : சிறுவர்கள் / சிற்றுண்டி, பலகை / பட்டு, நிழல் / நிறம், தெய்வம் / தென்னை
இரண்டாம் பழம் : தட்டு / பட்டு, குச்சி / பூச்சி, பாக்கு / கொக்கு

**ஆகவே, எனவே, ஆகையால், ஆனால், இருந்தாலும் ஆகிய இணைப்புச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.**

1. குளிர்காலத்தில் மிகவும் குளிரும் ஆகவே கம்பளி ஆடை அணிதல் நல்லது.
2. இன்று ஞாயிற்றுக்கிழமை எனவே பள்ளிக்கு விடுமுறையாகும்.
3. தாத்தாவுக்குப் பார்வை மங்கலாக உள்ளது, ஆகையால் அவர் கண்ணாடி அணிகிறார்.
4. செல்வி செல்வச் செழிப்பு மிக்கவள், ஆனால் பிறருக்கு உதவக் கூடியவள்.
5. நாய் விலங்கினம் தான் இருந்தாலும் அதன் நன்றி உணர்வ பாராட்டத்தக்கது.

**உரையாடலாம் வாங்க : மேகமலை கிராம வருணனையை உன் சொந்த நடையில் கூறுக.**

**உனது ஊரின் மாலை நேரக் காட்சிகளை வருணித்துக் கூறுக.**

**இது போன்ற அழகான ஊரில் நீ வசிக்கிறாயா அல்லது அது போன்ற ஊருக்குச் சென்றதுண்டா?**

**சிந்திக்கலாமா ? பரபரப்பான நகர வாழ்க்கை இயற்கை வாழ்க்கையுடன் கூடிய கிராம வாழ்க்கை நீ எதை விரும்புகிறாய்? ஏன்?**

நான் கிராமத்தில் வாழ விரும்புகிறேன்.

1. ஊரில் பாதாள சாக்கடை அமைக்கப்பட வேண்டும்.
2. கழிவுநீர் தெருவில் ஓடுவதைத் தவிர்க்க வேண்டும்.
3. பிளாஸ்டிக் கழிவுகளை எரிக்காமல், மறுசுழற்சிக்கு உட்படுத்த வேண்டும்.
4. குப்பைகளை கண்ட இடங்களில் போடாமல் குப்பைத்தொட்டிகளில் போட வேண்டும்.
5. ஊரைச் சுற்றிலும் மரங்கன்றுகளை நட்டு வைத்து ஊரைப் பசுமையாக மாற்ற வேண்டும்.

**சரியான பலூன்களை எடுத்துப் பொருத்துக.**

1. அளவில்லா மகிழ்ச்சி 2. விடிந்தது 3. நீர்த்துளிகள் 4. பஞ்சு மூட்டைகள்

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பெருக்கு + எடுத்து 2. ஈரம் + காற்று 3. வெள்ளமென 4. சொட்டுச்சொட்டாக
5. காகிதக்கப்பல்

**வினாக்களுக்கு விடையளி.**

1. அழகிய மலைக்கிராமத்தின் பெயர் மேகமலை.
2. மழை பெய்தல், மேகங்கள் நகர்தல், வளைந்து செல்லும் மலைப்பாதை, பனைஓலைக் குடிசை, மண்பானைச் சமையல் மணம், மரம் செடி கொடிகள்.
3. மழையில் சிறுவர்கள் காகிதக்கப்பல் செய்து மிதக்கவிட்டார்கள்.

**பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள வருணனைச் சொற்களை எழுதுக.**

பச்சைப்பசேல் என்ற வயல்வெளி,பஞ்சு பொதிகள் போன்ற மேகக்கூட்டங்கள், வளைந்து நெளிந்து செல்லும் மலைப்பாதை, சிலுசிலுப்பான காற்று, வட்டநிலா போன்ற பொட்டு, வெள்ளை வெளேரென்ற வரகரிசிச்சோறு.

**புதிய சொற்களை உருவாக்குக :** அம்மி, மடம், பயில், அகம், கதம், கல், தடம், பகல், படம்

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சிறுதானிய உணவு முறை நமக்கு ஏற்புடையது.
2. கம்பு, சோளம், தினை, வரகரசி
3. துரித உணவு வகைகளை உண்பதால் பல நோய்கள் ஏற்படுகின்றன. எனவே துரித உணவு வகைகளை உண்ணக்கூடாது.

*கரிகாலன் கட்டிய கல்லணை*

**உரையாடலாம் வாங்க : கல்லணை பற்றி பாடத்தில் வரும் செய்திகளைக் கூறுக.**

காவிரி ஆறானது காவிரி, கொள்ளிடம், பெண்ணாறு, புது ஆறு என்று நான்காகப் பிரிகிறது. காவிரி பிரியும் இடத்தில் தான் கல்லணை கட்டப்பட்டுள்ளது. காவிரியில் அடிக்கடி பெரு வெள்ளம் ஏற்படுவதுண்டு. அந்த நீர் கடலில் கலந்து வீணாகி விடும். கோடைக்காலத்திலும் நீர் கிடைக்கும் பொருட்டு கல்லணை கட்டப்பட்டது.

**உனது ஊரில் உள்ள நீர்நிலைகளைக் கூறுக.**

வைகை அணை, சாத்தனூர் அணை ஆகியவை எனது ஊரிலுள்ள நீர்நிலைகளாகும்.

**சிந்திக்கலாமா ? மழைநீர் சேகரிப்பு தொட்டி யார், யார் வீட்டில் உள்ளது? அதை ஏன் அமைக்கின்றனர்?**

மழைநீர் சேகரிப்பு தொட்டி எங்கள் வீட்டில் உள்ளது. கோடைக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க மழைநீரானது நிலத்தடி நீரில் சேகரிக்கப்படுகிறது. இதனை அரசு அனைத்து வீடுகளிலும் செயல்படுத்தி வருகிறது.

**சரியான பழத்தைத் தேர்ந்தெடுக்க.**

1. முச்சங்க காலம் 2. இயல்பாக வரும் பெயர் 3. நிகரானவர் 4. பெரியோர் 5. குறுகியது.

**சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உலகம் + பழமை2. வெள்ளம் + காலம் 3. வந்து + அடைகிறது 4. தொழிற்நுட்பம் 5. நீர்ப்பாசனம்

**பந்தை அதன் எதிர்ச்சொல் கூடையில் போடலாமா?**

1. வேற்றுமை 2. சிறியோர் 3. கனிகள் 4. வெற்றி 5. இன்பம்

**சரியானதை எடுத்து எழுதுக.**

1. தஞ்சாவூர் 2. கொள்ளிடம் 3. கரிகாலன் 4. பழந்தமிழர் 5. சர்தார் காட்டன்

**வினாக்களுக்கு விடையளி.**

1. கரிகாலனின் இயற்பெயர் வளவன் ஆகும்.
2. இளம் வயதில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக வளவனின் கால் கருகிவிட்டது. எனவே இவர் கரிகாலன் என அழைக்கப்பட்டார்.
3. மழைப்பெருக்கால் காவிரியின் நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுக்கவும், கோடைக்காலத்தில் நீர்ப்பற்றாக்குறையை சமாளிக்கவும் கல்லணை கட்டப்பட்டது.
4. இரும்பு, சிமெண்ட் பயன்படுத்தாமல் இந்த அணை கட்டப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகள் கடந்து கல்லணை இன்றும் உறுதியோடு இருக்கிறது.
5. கல்லணையை மகத்தான அணை என்று கூறியவர் சர்தார் காட்டன் ஆவார்.

**ஓர் எழுத்தைக் கண்டுபிடி. நான்கு சொல்லைப் பெறலாம்.**

1. கடவு, சாடம், படம், சடம் 2. வாகம், பாகம், காகம், மகம் 3.குளிர், குடம், குரங்கு, குற்றம்

**உரையாடலாம் வாங்க : இப்பாடலின் பொருளை சொந்த நடையில் கூறுக.**

**கலந்துரையாடுவோம்**

**சூழல் 1 : மாலாவின் அம்மா என் வீட்டு பெரியோர் மட்டுமின்றி வயதில் மூத்தோர்கள் மற்றும் பெரியவர்கள் யாராக இருந்தாலும் அவர்களிடம் பணிந்து மரியாதையாக நடக்க வேண்டும் என்று கூறினார்.**

**சூழல் 2 : மருதுவின் அப்பா யார் என்ன கேட்டாலும் கொடுக்கக்கூடாது என்று கூறுகிறார், யார் கூப்பிட்டாலும் காதில் வாங்கிக் கொள்ளக்கூடாது என்கிறார்.**

**இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

மாலாவின் அம்மா செய்வது மிகச் சரியான செயலாகும். ஆனல் மருதுவின் அப்பா கூறும் செயல்கள் அனைத்தும் மிகத் தவறானவையே.

**சரியான பழத்தைத் தேர்ந்தெடுக்க.**

1. பார்த்தது + அங்கே 2. மேலே 3. உயிரற்ற பொருள் 4. நினைத்திருந்தேன்
5. சரியான அமைப்பு

**வினாக்களுக்கு விடையளி.**

1. ராஜாவைப் போல் சோளக்கொல்லையின் நடுவே நின்றவர் சோளக்கொல்லைப் பொம்மை.
2. பிறர் உள்ளளே வராமல் தோட்டத்தைக் காவல் காப்பதே காவல்காரரின் பணியாகும்.
3. கறுப்புக்கோட்டு, வெள்ளைச்சட்டையை காவல்காரருக்குக் கொடுத்தது காகமாகும்.
4. காவல்காரர் உயிருள்ள மனிதர் கிடையாது. வைக்கோல் மீது துணி சுற்றப்பட்ட உயிரற்ற சோளக்கொல்லைப் பொம்மை. எனவே அவர் காகம் கொடுத்த ஆடைகளை அணியவில்லை.

**முதலெழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| சட்டை | சரிகை | நட்ட | நடுவே |
| இரவும் | இங்கே | பெருமை | பெயரில் |
| காக்கை | காவல் | வைக்கோல் | வைத்தி |

**பூக்களுக்குப் பொருத்தமான வண்டுகளை இணைக்க.**

1. சரிகை வேட்டி 2. கறுப்புக் கோட்டு 3. வெள்ளைச் சட்டை
4. சோளக்கொல்லைப் பொம்மை 5. கனத்த மழை

**பாடலை தொடர்ந்து பாடுவோமா?**

பெரியப்பா பேரீச்சம்பழம் பெரியம்மா பிஸ்கோத்து சித்தப்பா ரவா லட்டு
சித்தி மாங்காய்

**உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

1. தாமரை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் காணப்படும்.
2. தாமரை விதைகள் பல ஆண்டுகளுக்கு முளைக்கும் தன்மை கொண்டது.
3. தாமரைக்கு வழங்கும் வேறு பெயர்கள் அரவிந்தம், கமலம், பதுமம், முளரி, வனசம் ஆகியவை ஆகும்.
4. இந்திய நாட்டின் தேசிய மலர் தாமரை ஆகும்.

**கோடிட்ட இடத்தில் தகுந்த சொற்களைக் கொண்டு நிறைவு செய்து தகுந்த தலைப்பினை எழுதுக.**

மழை

உயிர்வாழ, உணவு, வாழ, தண்ணீர், மரம், சேமிக்க, குளம், பயனடைய வேண்டும்.

*இயற்கை விவசாயம்*

**உரையாடலாம் வாங்க : நீங்கள் மேனகாவாக இருந்தால் விவசாயத்தின் மேம்பாட்டிற்காக என்ன செய்வீர்கள் ? வகுப்பில் கலந்துரையாடுக.**

நான் மேனகாவாக இருந்தால் இயற்கை உரங்களைப் பயன்படுத்துவேன். என் வீட்டில் தினமும் பயன்படுத்தக்கூடிய காய்கறிக்கழிவுகளை ஒரு தொட்டியில் சேகரித்து அதனை மட்கச் செய்து சிறு தொட்டிகளில் தரமான விதைகளைக் கொண்டு பயிர் செய்வேன். இதனால் சத்தான கீரை, காய்கறிகளை நாமே உற்பத்தி செய்து உண்ணுவேன். கத்தரி, வெண்டை, தக்காளி, அவரை, பாகற்காய், பச்சை மிளகாய் முதலியவற்றை வளர்ப்பேன்.

**உழவுத்தொழில் இல்லையென்றால் உலகம் என்னவாகும்? உன் கருத்துகளை எழுதுக.**

எல்லோருமே அலுவலகங்களில் தான் வேலை செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டால், உழவுத்தொழிலை செய்வது யார்? யாரால் விவசாயம் செய்து உணவுப்பொருள்களை விளைவிக்க முடியும்? அலுவலக வேலையில் கிடைக்கும் வெறும் காகிதப்பணத்தை நம்மால் சாப்பிட முடியாது. விவசாயிகள் சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மாடி + தோட்டம் 2. விடியற்காலை 3. தலைமுறை 4. இயற்கைஉரம்

**வினாக்களுக்கு விடையளி.**

1. கிராமத்தில் தலைமுறை, தலைமுறையாக மூலிகைகளைக் கொண்டு வைத்தியம் பார்ப்பார்கள். இதனை நாம் பாட்டி வைத்தியம் என்று கூறுகிறோம்.
2. ஆர்கானிக் என்பது இயற்கை என்பதை குறிக்கும். இயற்கையினால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பயிர்களையும் சொல்லலாம்.
3. மண்புழுக்கள் மண்ணில் மேலும், கீழுமாக செல்லும் போது அந்தத் துளைகளின் வழியாக காற்றும், நீரும் வேர் மண்டலத்தை சென்று அடைந்து பயிர்கள் செழிப்பாக வளர உதவுகிறது. மண்புழுவானது 'உழவர்களின் நண்பன்' என்று அழைக்கப்படுகின்றது.
4. செயற்கை உரம் என்பது வேதியியல் அடிப்படையில் தயாரிக்கப்படுகிறது. இதனால் மண்ணில் உள்ள புழுக்கள் அழிந்து விடுகிறது. பயிர்கள் விரைவாக வளரவும், உற்பத்தி பெருக்கி லாபம் ஈட்டுவதற்கும் வேதியல் உரம் பயன்படுகிறது. இது மட்டுமா பயிர்களுக்கு தெளிக்கின்ற உரம் மண்ணுக்குள் ஊடுருவி நிலத்தடி நீரையும் நிலத்தையும் பாதிக்கிறது.

**<u>நிறுத்தற்குறியிடுக.</u>**

1. ஆகா! இந்த கிராமம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது!
2. நாட்டுப்புற மருத்துவம் என்றால் என்ன?
3. பயறு, நெல், காய், கனி போன்றவற்றை விளைவித்தல் விவசாயம் எனப்படும்.

**சரியானவற்றை எடுத்து எழுதுக.**

செடி : கத்தரி, தக்காளி

மண்ணுக்கு அடியில் : கேரட், உருளைக்கிழங்கு, சேனை, பீட்ரூட்

கொடி : அவரை, புடலை, திராட்சை, வெண்டை, பூசணி

**புதிய சொற்களை உருவாக்கலாமா?**

படம், தமிழ், பசு, கருப்பு, பந்து, பழம், மேகம், உணவு, நாய், சிங்கம், பம்பரம்

**உரையாடலாம் வாங்க :**

**யானைக்கும், பானைக்கும் சரி என்ற கதையை உம் சொந்த நடையில் கூறுக.**

கதிரேசன் ஒருவர் ஓர் இரவு வணிகனிடம் தன் மகன் திருமண விழாவில் விடுவதற்காக ஒரு யானையை வாங்கி வந்தார். ஊர்வலத்தின் போது யானை இறந்து விட்டது. கதிரேசன் யானைக்குரிய விலையைத் தருவதாகவும் அல்லது வேறு யானை வாங்கித் தருவதாகவும் கூறினார். ஆனால் வணிகரோ, தனக்குத் தன்னுடைய யானை தான் வேண்டும் என அடம் பிடித்தார். இந்த வழக்கு மரியாதை இராமனிடம் விசாரணைக்கு வந்தது.

அவர்கள் இருவரையும் மறுநாள் நீதிமன்றத்திற்கு வரும்படி மரியாதை இராமன் கூறினார். கதிரேசனை மட்டும் தனியே அழைத்து, அவர் மறுநாள் நீதிமன்றத்திற்கு வர வேண்டாம் என்றும், அத்துடன் அவரது வீட்டுக் கதவின் பின்புறம் பழைய பானைகளை அடுக்கி வைத்து, கதவைத் தாழ்ப்பாள் போடாமல் இருக்கும்படியும் கூறினார்.

மறுநாள் கதிரேசன் வராததால், வணிகர் அவரை அழைத்துவர கதிரேசனின் வீட்டிற்குச் சென்றார். அவர் ஆத்திரத்துடன் கதிரேசன், வீட்டின் கதவைத் தட்ட, பின்னால் இருந்த பானைகள் கீழே விழுந்து உடைந்து நொறுங்கின. இப்போது கதிரேசன் தனக்குத் தன்னுடைய பழைய யானைகள் தான் வேண்டும் என்று அடம் பிடித்தார்.

இருவரும் நீதிமன்றத்தை அடைந்தனர். மரியாதை இராமனிடம் நடந்ததை விவரித்தனர். கதிரேசனால் இறந்த யானையைத் திருப்பித் தர இயலவில்லை. வணிகரால் உடைந்த பானைகளைத் திருப்பித் தர இயலவில்லை. ஆதலால் 'யானைக்கும் பானைக்கும் சரியாகப் போய்விட்டது' என மரியாதை இராமன் தீர்ப்பளித்தார்.

**சிந்திக்கலாமா? : உன் நண்பன் உன்னைத் தவறாகப் புரிந்துகொண்டு உன் மீது சினம் கொண்டால் நீ என்ன செய்வாய்?**

என் நண்பன் என்னைத் தவறாகப் புரிந்துகொண்டு என் மீது சினம் கொண்டால் நான் என்ன தவறு செய்தேன் என்று கேட்பேன். பிறகு என் மீது எந்தத் தவறில்லை என்பதைப் புரிய வைப்பேன்.

**வினாக்களுக்கு விடையளி.**

1. தன் மகன் திருமண விழாவில் ஊர்வலம் விடுவதற்காக கதிரேசன் யானையை இரவல் கேட்டார்.
2. ஊர்வலத்தின் போது யானை இறந்து விட்டது.
3. கதிரேசனை மறுநாள் நீதி மன்றத்திற்கு வர வேண்டாம் என்றும், அவரை அழைத்து வர வணிகரை அனுப்புவதாகவும் மரியாதை இராமன் கூறினார். அத்துடன் உழவர் தன் வீட்டுக் கதவின் பின்னால் பழைய பானைகளை அடுக்கி வைக்கும் படியும், கதவைத் தாழிட வேண்டாம் என்றும் கூறினார்.
4. யானைக்கும் பானைக்கும் சரி என்ற கதைஉணர்த்தும் நீதி 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு'.

**சிப்பிகளில் உள்ள எழுத்துகளைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. அரபு 2. மரியாதை இராமன் 3. யானை 4. பானைகள்

**சொற்களை முறைப்படுத்தி சரியான தொடரமைத்து எழுதுக.**

1. மரியாதை இராமன் விசித்திரமான வழக்கை எதிர் கொண்டார்.
2. ஊர்வலத்தில் யானை தற்செயலாக இறந்து விட்டது.
3. கதவின் பின்னால் யானைகள் அடுக்கி வைக்கப்பட்டன.
4. பானைகள் கீழே விழுந்து உடைந்து விட்டன.

**குறிப்புகளைப் பயன்படுத்திக் கதை உருவாக்குக. பொருத்தமான தலைப்பிடுக.**

புறாக்கள் மரத்தில் வசித்தன. இதனைக் கண்ட வேடன் தானியங்களை ஓரிடத்தில் கிடக்கும்படி செய்தான். அதன் பின்னால் வலையும் காணப்பட்டது. அதனைக் கண்ட புறாக்கள் தானியங்களைத் தின்ன ஆரம்பித்தன. பிறகு புறாக்கள் ஒவ்வொன்றும் வேடன் விரித்த வலையில் மாட்டிக் கொண்டன. பிறகு புறாக்கள் வெளியே வர முடியாமல் தவித்தன. அதில் இருந்த தாய்ப்புறா தப்பிக்க ஒரே வழி ஒற்றுமையாக வெகு விரைவில் பறக்க வேண்டும் என்று கூறியது. அனைத்து புறாக்களும் வேகமாக பறந்தது. வேடன் ஏமாந்துவிட்டான்.

தலைப்பு : ஒற்றுமையே வலிமை

**குறிப்புகளைக் கொண்டு கட்டத்திலிருந்து விடை காண்போமா?**

| | | | | |
|---|---|---|---|---|
| இடமிருந்து வலம் | : | 1. பகைவன் | 2. யானை | 3. புத்தகம் |
| வலமிருந்து இடம் | : | 1. புகழ் | 2. தண்ணீர் | 3. கப்பல் |

**உரையாடலாம் வாங்க :**

**உன்னிடம் பிறர் எப்படிப் பேச வேண்டும் என எண்ணுகிறாய்? ஏன்?**

பிறர் என்னிடம் இனிய சொற்களைப் பேச வேண்டும். கடுஞ்சொற்களைப் பேசக் கூடாது என நான் நினைக்கிறேன். பிறர் பேசும் இனிய சொற்கள் நம் மனதிற்கு இனிமையாகவும் ஆறுதலாகவும் அமைகின்றன. எனவே பிறர் என்னிடம் இன்சொற்களை மட்டுமே பேச வேண்டும் என நான் நினைக்கின்றேன்.

**சிந்திக்கலாமா? : இன்சொற்களைப் பேசுவதால் நன்மையே விளையும் என்பதைப் பிறருக்கு எப்படி உணர்த்தலாம் ?**

பிறர் பேசும் இன்சொற்கள் நம் மனதிற்கு இனிமையாகவும், ஆறுதலாகவும் அமைகின்றன. எனவே பிறர் இன்சொற்களைப் பேசுவதால் நன்மையே விளையும் என்பதை அறியலாம்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இனிமை + சொல் 2. ஒலிக்கின்ற 3. வியன் + உலகம்

**வினாக்களுக்கு விடையளி.**

1. உலகம் இனிய சொற்களைப் பேசும் போது மகிழும். குளிர்ச்சி மிக்க நிலவின் ஒளி உண்டு கடல் அலைகள் பொங்குகின்றன. அது போல் இனிமை மிக்க இன்சொல் கேட்டு உலகம் மகிழும் என்று நன்னெறிப்பாடல் கூறுகிறது.
2. கடலில் அலைகள் நிலவின் குளிர்ச்சி மிக்க ஒளி கண்டு பொங்கி எழும்.

**பொருத்துக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. இன்சொல் | - | இனிய சொல் | 2. வன்சொல் | - | கடுஞ்சொல் |
| 3. அழல்கதிர் | - | கதிரவனின் ஒளி | 4. நண்ணென் கதிர் | - | நிலவின் ஒளி |

**சொற்களை முறைப்படுத்தி சரியான தொடரமைத்து எழுதுக.**

1. மரியாதை இராமன் விசித்திரமான வழக்கை எதிர் கொண்டார்.
2. ஊர்வலத்தில் யானை தற்செயலாக இறந்து விட்டது.
3. கதவின் பின்னால் யானைகள் அடுக்கி வைக்கப்பட்டன.
4. பானைகள் கீழே விழுந்து உடைந்து விட்டன.

**குறிப்புகளைக் கொண்டு கட்டத்தை நிரப்புக.**

1. இளநீர் 2. துன்பம் 3. சொர்க்கம் 4. மயில்

வன்சொல்லின் எதிர்ச்சொல் இன்சொல்.

**சிறு வட்டத்திலுள்ள எழுத்தை முதலாகக் கொண்டு சொல் உருவாக்குக.**

1. பாவை 2. பாகம் 3. பாதம் 4. பாதை 5. பாலை 6. பானை 7. பாம்பு
8. பாடம் 9. பாவம் 10. பாடல்

## பனிமலைப் பயணம்

**உரையாடலாம் வாங்க :**

**உமது நண்பரிடம் உமக்குப் பிடித்த, பிடிக்காத பண்புகளைப் பற்றி வகுப்பறையில் கலந்துரையாடுக.**

பிறர்

**சிந்திக்கலாமா? : பக்கத்து ஊருக்குச் செல்லலாம், பேருந்திலும் செல்லலாம் ... எதில் பயணம் செய்ய நீ விரும்புவாய், காரணம் என்ன?**

படகில் பயணம் செய்வதை நான் பெரிதும் விரும்புவேன். படகில் பயணம் செய்வது ஓர் இனிமையான அனுபவம் ஆகும். அலைகளின் நடுவே மிதந்து செல்வதும், அருகிலுள்ள பசுமையான இயற்கைக் காட்சிகளைக் காண்பதும் மனதிற்கு மகிழ்ச்சி தரும் செயல்களாகும். படகுப் பயணம் மனதிற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் கொடுக்கிறது. எனவே படகில் பயணம் செய்வதையே நான் விரும்புவேன்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. முதலை 2. விருந்து + உண்டு 3. பிறகு + என்ன 4. இன்னுமொரு 5. பென்குயின்

**வினாக்களுக்கு விடையளி.**

1. தங்களைப் போன்ற விலங்குகளைச் சாப்பிட்ட ஒரு முதலை செரிமானம் ஆகாமல் இறந்து போனதாக பென்குயின் கூறியது. அத்துடன் தாங்கள் பாம்புக்கடிக்கு எதிரான விஷ முறிவுச்செடிகளைத் தின்றிருப்பதாகவும், தங்களை யார் கடித்தாலும் அவர்கள் இறப்பது உறுதி என்றும் பென்குயின் முதலையிடம் கூறியது.
2. பனிமலைத் திருவிழாவிற்கு விலங்குகள் சென்றன.
3. இக்கதையில் எனக்குப் பிடித்த விலங்கு பென்குயினாகும். பென்குயினானது தனது புத்திக்கூர்மையால் அனைவரையும் முதலையிடமிருந்து காப்பாற்றியது. எனவே எனக்கு பென்குயினைப் பிடிக்கும்.

**சூழ்நிலைக்கான உணர்வுகளைப் பொருத்துக.**

1. விரைவு 2. அச்சம் 3. வாழ்த்து 4. கேளிக்கை 5. பாதுகாப்பு

**கீழேயுள்ளவற்றில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து, உரிய சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. தேடி அலைந்தான் 2. கண் விழித்தாள் 3. செய்தித்தாள்கள்

4. மாற்றுத்திறனாளி 5. தேசத்தந்தை 6. நெல் வயல்

**ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு வட்டத்தை வண்ணமிடுக. வண்ண மாலையை அணிந்து கொள்ளுங்கள்.**

1. வண்டி 2. சுண்டல் 3. வைகை 4. கை 5. பையன் 6. காவல் 7. சிவப்பு 8. பை 9. கைப்பை

**அகரவரிசைப்படுத்துக.**

**மகிழ்ச்சியாய்த் தாவத் தொடங்கு, சௌந்தர்யம் என்னும் அழகிய தேன்கூட்டைச் சென்றடையலாம்.**

சந்து, சாரல், சிறகு, சீப்பு, சுமை, சூடம், செம்பருத்தி, சேவல், சைவம், சொந்தம், சோகம், சௌந்தர்யம்.

## *ஆராய்ந்திட வேண்டும்*

**கதையை உம் சொந்த நடையில் கூறுக.**

மன்னர் ஒருவர் தன் குதிரையின் மேலேறி ஒரு கிராமத்தின் வழியே சென்று கொண்டிருந்தார். அவர் இரக்க குணமுடைய அரசர். அவரது குதிரையும் அவரைப் போலவே இரக்க குணம் கொண்டது. அவர்கள் செல்லும் பகுதியில் நாய் ஒன்று நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்தது. அதற்குக் காலில் அடிபட்டிருந்தது. குதிரை அதற்கு உதவி செய்ய நினைத்தது. அரசரிடம் இது பற்றிக் கூறியது. உடனே அரசன் தன் காவலர்களை அழைத்து ஆணையிட்டான். அவர்கள் அந்த நாயைத் தூக்கி வந்து குதிரை மேல் அரசனுக்கு முன்னால் அமர்த்தினார்கள். நாய்க்கு ஒரே மகிழ்ச்சி.

குதிரையின் மீது வந்த மன்னரைக் கண்டு வழியிலுள்ள மக்கள் வணக்கம் செலுத்தினர். இது கண்ட நாய், தனக்குத்தான் இந்த மரியாதை என நினைத்துக் கொண்டு குரைக்க ஆரம்பித்தது. நாயின் மனநிலையை அறிந்து கொண்ட குதிரை, மன்னருக்குத் தான் இந்த மரியாதை என நாயிடம் கூறி அதனை அமைதியாய் இருக்கும்படி கேட்டுக் கொண்டது. குதிரையின் பேச்சைக் கேட்ட நாய், அதை நம்பவில்லை. குதிரை தன்மீது பொறாமைப் படுவதாக நினைத்து தொடர்ந்து குரைக்க ஆரம்பித்தது. உடனே மன்னரின் அருகில் இருந்த காவலர்கள் நாயைக் கீழே இறக்கி விட்டு அதை அடித்து விரட்டி விட்டார்கள். சற்றுத் தொலைவில் ஓடிப்போய் நின்று கொண்ட நாய், மக்கள் அனைவரும் அரசனுக்கு மரியாதை செலுத்துவதைப் பார்த்தது. இப்போது தான் அதற்கு உண்மை தெரிந்தது.

ஆராயாமல் முடிவெடுத்தால் ஆபத்து தான் உண்டாகும் என்பதை இந்தக்கதை மூலம் அறிந்து கொள்கிறோம்.

**ஆராய்ந்து செயல்படுவதால் கிடைக்கும் நன்மைகளைக் கூறுக.**

- ✓ ஆராய்ந்து செயல்படுவதால் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று நமக்குத் தெரியவரும்.
- ✓ யாருக்கு உதவி செய்ய வேண்டும் யாருக்கு உதவி செய்யக்கூடாது என்ற உண்மை நிலை நமக்குத் தெரியவரும்.
- ✓ ஆராய்ந்து செயல்படுவதால் அவசர அவசரமாக தவறான முடிவுகள் தவிர்க்கப்படும்.
- ✓ இதனால் பிற்காலத்தில் மனவருத்தம் அடையும் நிலை தவிர்க்கப்படும்.

**சிந்திக்கலாமா?**

**நீ செய்யாத செயலுக்கு உனக்கு ஒருவர் நன்றி கூறினால் அல்லது பரிசு அளித்தால் அவ்வேளையில் நீ என்ன செய்வாய்?**

நான் செய்யாத செயலுக்கு ஒருவர் நன்றி கூறினால் நான் அவரிடம் அதனை நான் செய்யவில்லை என்று தெளிவுபடுத்துவேன்.

அவர் பரிசுப் பொருள்களைக் கொடுத்தால், அவரது அன்பிற்கு நன்றி கூறிவிட்டு அதனை அவரிடமே திருப்பிக் கொடுத்து விடுவேன்.

**பொருள் கூறுக :**

1. இரக்கப்பட்டது 2. உற்சவம் 3. ஊர்வலம்

**பிரித்தெழுதுக :**

1. நாய் + ஒன்று 2. கனை + பொலி 3. மக்கள் + எல்லாம் 4. முடிவு + எடுத்தால்
5. வெறுப்பு + அடைவார்கள்

**நிறுத்தற்குறியிடுக :**

1. ‘யாரு? ஆதித்தனா! வா தம்பி என்ன, இன்று அதிகாலையிலேயே வந்து விட்டாயே.....!
2. எனக்கு அளவிற்கு மீறிய உற்சாகம் வருகின்றதே!
3. நாயே! ‘குடிமக்கள் யாரும் உன்னைப் பார்த்து வணங்கவில்லை.

**சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. மான் துள்ளித்துள்ளி ஓடியது.
2. இராமன் நேரம் ஆகி விட்டக் காரணத்தினால் பள்ளிக்கு வேகவேகமாய்ச் சென்றான்.
3. எங்கள் தோட்டத்தில் புடலங்காய் கொடியில் நீள நீளமாக வளர்ந்திருக்கிறது.
4. மாதவியின் அம்மா கன்னத்தில் அடித்ததால் தேம்பித் தேம்பி அழுதாள்.
5. வண்டி இல்லாமல் நான் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்ததால் நடந்து நடந்து எனக்கு கால் வலிக்கிறது.

**குறிப்பைப் படி! விடையைக் கொடு!** 1. மலை 2. கடை 3. கீரி

**சொற்களிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.**

1. வாழ்க்கைநெறிகள் 2. அருமையான கதை 3. நீண்டநாள் பணி
4. வணங்குகிறார்கள் 5. காவலர்கள்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. அரசரைப் போலவே அவரது குதிரையும் இரக்க குணம் கொண்டது. எனவே காலில் அடிப்பட்டு நொண்டிக் கொண்டிருந்த அந்த நாய்க்கு உதவி செய்யக் குதிரை நினைத்தது.
2. குதிரை மேல் இருந்த நாய் ஆணவத்துடன் அதிக சத்தம் போட்டுக் குரைக்க ஆரம்பித்தது. அது மன்னனுக்கும் மக்களுக்கும் இடையூறாக இருந்தது. எனவே, காவலர்கள் குதிரை மீது இருந்த நாயை இறக்கி விட்டனர்.

**விலங்குகளுக்குரிய ஒலிப்புகளை கண்டறிந்து எழுதுக.**

1. கனைக்கும் 2. முழங்கும் 3. பிளிறும் 4. குரைக்கும் 5. உறுமும்

**மேற்கண்ட எடுத்துக்காட்டைப்போல் எழுதுக.**

1. தொடுத்தாள், தொடுக்கிறாள், தொடுப்பாள் 2. மேய்ந்தது, மேய்கிறது, மேயும்
3. வரைந்தோம், வரைகிறோம், வரைவோம் 4. வென்றான், வெல்கிறான், வெல்வான்
5. ஆடின, ஆடுகின்றன, ஆடும்

**அட்டவணையில் விடுபட்ட இடங்களை நிரப்புக.**

1. செய்தான், செய்வான் 2. பறக்கிறது, பறக்கும் 3. படித்தான், படிக்கிறான்
4. கேட்கிறது, கேட்கும் 5. சொன்னார்கள், சொல்கிறார்கள்.

**கீழ்க்காணும் படங்களுக்குப் பொருத்தமான காலங்களைப் பயன்படுத்தித் தொடர் எழுதுக.**

1. ராஜா, மீனா ஆகிய இருவரும் கப்பலில் செல்கிறார்கள்
2. செல்வம் மிதிவண்டி ஓட்டுகிறான்.
3. கணேஷ் குப்பையை குப்பைத்தொட்டியில் போடுகிறான்.

**உரையாடலாம் வாங்க :**

**நாவைக் காக்காவிட்டால் ஏற்படும் துன்பம் குறித்துப் பேசுக.**

நாம் வாழ்வதும், வீழ்வதும் நமது சொற்களாலே. சொற்கள் கூரிய அம்பு போல் பிறரைத் தாக்கும் வலிமை மிக்கவை. கடுஞ்சொற்களை நாம் பேசும்போது அவை பிறர் மனத்தில் ஆறாத காயங்களை ஏற்படுத்தி விடுகின்றன. "உன்னுடைய நாவையும், பணப்பையும் மூடி வைத்திரு" என்று கூறுவதுண்டு. அவசரப்பட்டு சொற்களை நாம் அள்ளி வீசி விட்டால், பின்னர் அளவுக்கதிகமான துன்பங்களை எதிர் கொள்ள நேரிடும். எனவே சொற்களை அளந்து பேச வேண்டும். சிறிதளவே பேசினாலும் சிந்தித்துப் பேச வேண்டும். கனிவாகப் பேசினால் இனிமை கொஞ்சும்; கடுமையாகப் பேசினால் கவலைதான் மிஞ்சும்.

**சிந்திக்கலாமா?**

**அனுவும், பானுவும் சாலையைக் கடக்க, நின்று கொண்டு இருந்தனர். அப்போது மஞ்சள் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அனு சாலையைக் கடக்கத் தொடங்கினாள். பானு, பச்சை விளக்கு ஒளிர்ந்தால் மட்டுமே கடக்க வேண்டும். பொறுமையாக இரு என்றாள். எது சரியான செயல்?**

மஞ்சள் விளக்கு எரியும் போது நாம் புறப்படுவதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும். அப்போது சாலையைக் கடக்கக் கூடாது. பச்சை விளக்கு எரிந்த பின்தான் சாலையைக் கடக்க வேண்டும். எனவே பானு கூறியது சரிதான்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. பொறுமை 2. நிறை + உடைமை 3. மெய்ப்பொருள் 4. சினம் கொள்ளாமை

5. பொறையுடைமை

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. நிறையுடைமை எனப்படும் பெருந்தன்மை நம்மை விட்டு நீங்காமல் இருக்க வேண்டுமென்றால் பொறையுடைமை போற்றப்படும்.
2. உலகில் பற்பல மக்கள் பற்பல கருத்துக்களைக் கூறுவர். அவற்றின் உண்மையை அறிந்து கொள்ள வேண்டியது நமது பொறுப்பாகும். எனவே வள்ளுவர் மெய்ப்பொருள் காண்பதே அறிவு எனக் கூறுகிறார்.
3. நாவைக் காக்காவிடில் நாம் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்பம் அடையும் நிலை ஏற்படும்.
4. நம் மனத்தில் சினம் எழாதபடி காத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு காத்துக் கொள்ளத் தவறினால் அந்த சினம் நம்மை அழித்து விடும்.
5. 'குற்றமும் குறையும்' என்ற கதை எனக்குப் பிடித்ததாகும். ஏனெனில் பிறரைக் குறை கூறிக் கொண்டே இருப்பது ஓர் இழிவான செயலாகும்.

**பொருத்துக.**

1. பொறுமை 2. உண்மைப்பொருள் 3. காக்காவிட்டால் 4. துன்பப்படுவர் 5. சொல்குற்றம்

**பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அக்கறை 2. இரக்கம் 3. கோலம் இடு 4. பறந்தது 5. தீபாவளி

**பொருத்தமான வினாச்சொல்லை எடுத்து வினாத்தொடரை முழுமைப்படுத்துக.**

1. யார்? 2. என்ன 3. எத்தனை 4. ஏன் 5. எதற்காக 6. யாருடைய

7. எதனைக் 8. எத்தனை 9. என்ன 10. எந்த

**நமக்குத் தேவையான பண்புகளைத் தேர்ந்தெடுப்போமா?**

அன்பு, வாய்மை, ஈகை, செய்ந்நன்றி, அடக்கம், அறிவு, ஒழுக்கம்

*பசுவுக்குக் கிடைத்த நீதி (நாடகம் )*

**உரையாடலாம் வாங்க :**

**நீங்கள் மனுநீதிச் சோழனாக இருந்தால், பசுவின் துயரத்தை எப்படிப் போக்குவீர்கள்?**

நான் மனுநீதிச் சோழனாக இருந்தால் இத்தகைய முடிவை எடுத்திருக்க மாட்டேன். இது வேண்டுமென்றே செய்த கொலை அல்ல. எதிர்பாராத விபத்து என்று கூறி அரசகுமாரனுக்கு, அவனது கவனக்குறைவிற்காக சிறிய தண்டனையை விதித்திருப்பேன். பசுவின் துயரத்தைப் போக்கும் வண்ணம் அந்தப் பசுவை அரண்மனையில் வைத்துப் பராமரித்து அதற்கு வேண்டிய உதவிகள் வழங்க ஏற்பாடு செய்திருப்பேன்.

**சிந்திக்கலாமா?**

**வீட்டிற்குப் போகும் வழியில் ஓணான் ஒன்றைச் சிறுவர்கள் சிலர் துன்புறுத்துகின்றனர். அவர்கள் செய்தது சரியா அந்தச் செயலை நீங்கள் எப்படித் தடுப்பீர்கள்?**

அந்தச் சிறுவர்களிடம் ஓணானை அடிப்பதால் அதற்கு ஏற்படும் துன்பத்தைப் பற்றிக் கூறுவேன். வேலியில் நின்றாலும் ஓணான் நம்மைப் போன்ற உயிரினம் தானே. நம்மைப் பிறர் கல்லால் அடித்தால் நாம் எவ்வளவு வேதனை அடைவோம். அதுபோல்தான் அந்த ஓணானும், அதற்கு நாம் ஒருபோதும் தீங்கு செய்யக்கூடாது. எனவே கற்களைக் கீழே போட்டுவிட்டு வேறு விளையாட்டுகளில் ஈடுபடும்படி அன்புடன் கூறி அந்தச் சிறுவர்களின் மனதை மாற்ற முயல்வேன்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்கள் செல்வம் 2. ஆர்வம் + மிகுதி 3. மணி + கூண்டு 4. பூவுலகம் 5.ஆச்சர்யம்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. குடிமக்களுக்கு ஏதேனும் குறைகள் ஏற்பட்டால் அவை உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டும். மணி ஒலித்ததும் அரசன் நேரில் வந்து அவர்களது துன்பத்தைப் போக்குவான். இதற்காகவே மனுநீதிச்சோழன் ஆராய்ச்சிமணியை அமைத்தான்.
2. அரசனின் மகன் தெருவில் ஓட்டி வந்த தேர்க்காலில் பசுவின் கன்று அடிபட்டு உயிரிழந்து விட்டது. இதுவே பசுவின் துயரமாகும். பசுவின் கன்று தேர்க்காலில் உயிர்விட்டது போல், தேரை ஓட்டி வந்த தன் மகனும் தேர்க்காலில் இடப்பட்டு கொல்லப்பட வேண்டும் என்று அரசன் ஆணையிட்டான். குற்றம் செய்தவன் தன் மகன் என்றும் பாராமல் தண்டனை அளித்து மன்னன் பசுவின் துயரைப் போக்கினான்.
3. ஆம், தான் செய்த தவறுக்காக வீதிவிடங்கன் மிகவும் வருத்தப்பட்டான்.

**அகரமுதலி பார்த்துப் பொருள் தருக :**

1. தொன்று தொட்டு வரும் பரம்பரை தொடர்பு 2. துன்புறுத்துபவன் 3. நீதி குறையாமல்
4. பரந்த உலகம் 5. தாங்க முடியாத

**சொற்களை இணைத்து சொற்றொடர் உருவாக்குக.**

1. கவிதா அழகாக ஆடினாள். 2. குயில்கள் இனிமையாக கூவின.
3. குதிரை வேகமாக ஓடியது. 4. பறவைகள் உயரத்தில் பறந்தன.
5. குழந்தை அமைதியாக உறங்கியது. 6. ஆமை மெதுவாக சென்றது.

## *வேலைக்கேற்ற கூலி*

**உரையாடலாம் வாங்க :**

**கதையை உம் சொந்த நடையில் கூறுக.**

மாணவர்கள் தாமாகவே முன் வந்து இக்கதையை சுருக்கமாக எழுத வேண்டும்.

**சிந்திக்கலாமா?**

**அமைச்சர் வண்டிக்காரரிடம் எல்லாத் தகவல்களையும் பெறுவதற்கு என்னென்ன கேள்விகளைக் கேட்டிருப்பார்? எழுதுங்கள்.**

★ வண்டியில் இருப்பது என்ன? ★ எத்தனை நெல் மூட்டைகள் இருக்கின்றன?
★ அவை எங்கிருந்து வந்துள்ளன?
★ அந்த நெல் மூட்டைகள் எங்கு கொண்டு செல்லப்படுகின்றன?
★ மூட்டையில் உள்ள நெல் எப்படிப்பட்டது? ★ வண்டியில் யார் யாரெல்லாம் இருக்கின்றனர்?
★ அவர்கள் மூட்டைகளை இறக்கி விட்டு எப்போது தங்கள் ஊருக்குத் திரும்புவார்கள்?

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. இரத்தினபுரி மன்னர் சிறந்த முறையில் தன் நாட்டை ஆட்சி செய்து வந்தார். அவர் தம் நாட்டில் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.
2. விறகுவெட்டி தனக்கு நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் கூலி மட்டும் கொடுக்கப்படுகிறது. ஆனால் அமைச்சர்களுக்கு மட்டும் மாதம் ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுகிறது. இது என்ன நியாயம் என மன்னரிடம் தன் மனக்குறையைக் கூறினார்.
3. மன்னர் விறகுவெட்டியையும், ஒரு அமைச்சரையும் அழைத்து ''அரண்மனைக்கு வெளியே ஏதாவது வண்டி செல்கிறதா?" எனப் பார்த்து வரும்படிக் கூறினார்.

**படத்தைப் பார்ப்போம்; வினாக்கள் உருவாக்குவோம்.**

1. படத்தில் எத்தனை வாத்துக்குஞ்சுகள் உள்ளன?
2. குளத்தில் மீன்கள் காணப்படுகிறதா?
3. குளக்கரையில் என்னென்ன விலங்குகள் உள்ளன?

**விடுபட்ட எழுத்துகளை நிரப்பி விடுகதைக்கு விடையைக் கண்டுபிடிக்க.**

1. மண் 2. நிழல் 3. வானம் 4. விமானம்

**பதிலைப் பார்த்து வினாக்களை உருவாக்குவோம்.**

1. தமிழ்நாட்டின் தலைநகரம் என்ன? 2. ஆத்திசூடியை எழுதியவர் யார்?
3. சூரியன் எத்திசையில் உதிக்கும்?

**வடிவங்களைக் கொண்டு அதற்குரிய எழுத்தை எழுதிச் சொல் உருவாக்குக.**

1. பகை 2.பசை 3. விசை 4. சைகை 5. பல 6.பலகை 7.விசைப்பலகை

**சொல் எழுதுக - சொற்றொடர் அமைக்க**

1. வீடு – எனது வீடு பள்ளியருகே அமைந்திருக்கிறது
   வீணை – என் நண்பன் நன்றாக வீணை வாசிப்பான்.
2. வலை – வலையில் மீன்களைப் பிடிக்கலாம்.
   வடை – பாட்டி கடையில் வடை சுட்டு விற்கிறாள்.
3. தேள் – பூச்சியினங்களுள் ஒன்று தேள் ஆகும்.
   தேன் – தேன் மிகவும் ஆரோக்கியமான உணவு
4. மலை – அழகர்கோவிலில் மலை உள்ளது.
   மழை – மழைநீர் உயிரினங்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.
5. பால் – பால் குழந்தைகளுக்கு ஏற்ற உணவு
   பானை – மண்பானை நீர் மிகவும் உடலுக்கு நல்லதாகும்.
6. இலை– மரத்தின் ஒரு பாகம் இலை ஆகும்.
   இளை –
   இழை – நூலிழையினால் பட்டு செய்யலாம்.

## *உலா வரும் செயற்கைக்கோள்*

**சிந்திப்போமா?**

**செயற்கைக்கோள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் இந்த உலகம் எப்படி அமைந்திருக்கும்?**

செயற்கைக்கோள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்தால் இந்த உலகம் நிழற்படம் எடுக்க முடியாது. மண்ணிலுள்ள வளங்களைக் காண முடியாது. கைப்பேசி, தொலைக்காட்சி மற்றும் வானொலியை நம்மால் கேட்கவோ, கண்டுகளிக்கவோ முடியாது. வானிலை மாற்றத்தை அறிய முடியாது. சுனாமி போன்ற பேரழிவுகள் வருவதற்கு முன்பே நம்மால் உயிர்களைப் பாதுகாக்க முடியாது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மண்ணில் + உள்ள 2. நிழல் + படம் 3. பொய் 4. நன்மை + பயன் 5. தொலைவில்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பறவைக்கப்பல் எனக் குறிப்பிடப்படுவது செயற்கைக்கோள் ஆகும்.
2. சுழலும் கோள்களை நிழற்படம் எடுத்து அனுப்புகிறது. மண்ணிலுள்ள வளங்களை துல்லியமாகக் காட்டுகிறது. கைப்பேசி, தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்றவற்றிக்கு உதவுகிறது. வானிலை மாற்றங்களால் ஏற்படும் புயல், மழையைக் கண்டறிய உதவுகிறது. சுனாமி ( ஆழிப்பேரலை) போன்ற பேரழிவுகள் வருவதற்கு முன்பே மனித உயிர்களைப் பாதுகாக்கிறது.

**பல சொற்கள் தரும் ஒரே பொருள்**

1. உலகம் 2. கடல் 3. நிலா 4. ஆர்வம் 5. முதல்

**இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் அமைந்துள்ள சொற்களைப் பாடலில் இருந்து எடுத்தெழுதுக.**

1. விண்ணில் – விண்வெளி 2. மண்ணிலுள்ள – உண்மை 3. அருகில் – உருவில்
4. கனிம – மனித

**ஒரே ஓசையில் முடியும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்தெழுதுக.**

1. வந்திடுமே – பறந்திடுமே 2. வாருங்கள் – பாருங்கள் 3. பாய்ந்திடுமே – சொல்லிடுமே
4. உதவிடுமே – இயங்கிடுமே

**பாடலை நிறைவு செய்வோம்**

பஞ்சு போன்ற மேகமே பார்க்க நெஞ்சு மகிழுமே காற்று வீசும் போதிலே
கலைந்தே போகும் மேகமே மக்கள் உள்ளம் மகிழவே மழையாய் இறங்கும் மேகமே!

**கொடுக்கப்பட்ட சொற்களின் முதலெழுத்தை மாற்றினால், செயற்கைக்கோளுடன் தொடர்பு படுத்தலாம்.** 1. தகவல் 2. கோள்கள் 3. மழை 4. வெப்பம் 5. கனிமம்

**சிந்திக்கலாமா?**

**உன் பள்ளியில் நடைபெறப்போகும் அறிவியல் கண்காட்சிக்காக நீ புதுமையாகச் செய்ய விரும்புவது என்ன?**

என் பள்ளியில் நடைபெறப்போகும் அறிவியல் கண்காட்சிக்காக நீ புதுமையாகச் செய்ய விரும்புவது சத்தமின்றிச் செல்லும் போக்குவரத்துச் சாதனங்கள். நம்மைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழலைப் பல வழிகளில் நாம் தூய்மையற்றதாக்கி விடுகின்றோம். அதில் ஒலி மாசும் ஒன்று. இம்மாசினால் பாதிக்கப்படுவோர் பலர். சாலையில் வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச் செல்லாமல் பயணம் செல்வதற்கும், ஒலி பெருக்கி இல்லாமல் இருப்பதற்கும் வழியைக் கண்டறிந்து அதற்கான ஒரு மாதிரி வாகனத்தைச் செய்வதற்குப் பரிந்துரை செய்யும் அளவிற்கு ஒரு புதுமையான வாகனமொன்றைச் செய்வேன்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அழுக்கு 2. மின் + அணு 3. தடை + இன்றி 4. நெடிது + உயர்ந்து
5. நிறையாத

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. ஆசிரியர் வைத்திருந்த அழைப்பிதழில் மாவட்டக்கல்வித்துறை நடத்தும் அறிவியல் திருவிழா பற்றிய அறிவிப்பு இருந்தது.
2. மாணவர்கள் தங்கள் புதுமையான படைப்புகளை இங்கே காட்சிப்படுத்தலாம். சிறந்த படைப்புகளுக்குப்பரிசு உண்டு.
3. ஏற்கனவே பயன்படுத்தியிருந்த மின்னணுக் கழிவுகளால் அந்த உருவம் உருவாக்கப்பட்டிருந்தது. அது அரக்கன் வடிவில் இருந்தது. அதன் மார்புப்பகுதியில் ஒரு மடிக்கணினியும், தோள்பட்டையில் ஓர் ஒலிபெருக்கியும் இணைக்கப்பட்டிருந்தன.
4. மக்களால் பயன்படுத்தி தூக்கி எறியப்படும் மின்னணுக்கழிவுகள் நிலத்தையும், சுற்றுச்சூழலையும் பெரிதும் சீர்கேட்டுக்கு உள்ளாகின்றன.
5. நாம் பயன்படுத்திய மின்பொருள்களை முறையாக வகைப்படுத்த வேண்டும். அவற்றை மறுசுழற்சி செய்ய வேண்டும்.

**பாடுவோம்! விடை கூறுவோம்! எது சரி? எது தவறு?**

1. தவறு 2. சரி 3. சரி 4. தவறு 5. தவறு 6. சரி

**தொடர் இரண்டு. விடை ஒன்று கண்டுபிடிப்பேன்.** 1. மூட்டை 2. 3.

**ஒரு சொல்லுக்கு இரு பொருள் எழுதுக.**

1. பொழுது, பூக்களால் தொடுப்பது 2. மணம் வீசுவது, திருமணம் செய்வது
3. சிரிப்பு, பெண்களால் அணிவது 4. வீட்டின் ஒரு பகுதி, அடிப்பது
5. பாறை, 6. புத்தகம், நூல் கண்டு

*காடுக்குள்ளே பாட்டுப்போட்டி*

**உரையாடலாம் வாங்க :**

**கதையில் நடுவர் மயிலக்கா கூறும் தீர்ப்பு சரியானதா? உம் கருத்தைச் சொந்த நடையில் கூறுக.**

கதையில் நடுவர் மயில் அக்கா கூறும் தீர்ப்பு சரியானது. காகம் பாடாது என்று அதனை கேலி பேசியவர் முன்னிலையில் தொடர்ந்து அரைமணி நேரம் பாடி அனைவரின் கவனத்தையும் தம் பக்கம் ஈர்த்த காகம் தான் பரிசு பெறுவதற்று சரியான பறவை. காகம் தான் பாடியதோடு மட்டுமல்லாமல் மற்ற பறவைகளுக்கும் முன் மாதிரியாக இருந்தது. எனவே பாட்டு ராணி என்ற பட்டம் காகத்திற்குக் கிடைத்தது ஏற்புடைய ஒன்றாகும்.

**உங்கள் பள்ளியில் நடைபெற்ற பாட்டுப்போட்டி நிகழ்வுகள் குறித்துப் பேசுக.**

எங்கள் பள்ளியில் நவம்பர் பதினான்கு அன்று குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. அன்று பல போட்டிகள் நடைபெற்றது. நான் பாட்டுப்போட்டியில் கலந்து கொண்டேன். ஒவ்வொருவரும் ஒரு சிலர் இசைக்கருவிகளை இசைத்தனர். என்னுடைய தோழி குறையொன்றுமில்லை என்ற பாடலைப் பாடினாள். அனைவரும் அப்பாடலை மெய் மறந்து கேட்டனர். இறுதியில் பரிசு அறிவிக்கப்பட்டது. என் தோழிக்குப் பரிசு கிடைத்தது. நான் மிகவும் மகிழ்ந்தேன்.

**சிந்திக்கலாமா?**

**போட்டியில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் பங்கேற்பது தான் இன்றியமையாதது என்று உன் தந்தை கூறுகிறார். ஏன் தெரியுமா?**

போட்டியில் பங்கேற்பதன் மூலம் அவரவர் ஆற்றல் வெளிப்படுகிறது. பலமுறை தோற்றாலும் ஒரு முறையாவது வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை வளர்கிறது. போட்டியில் கலந்து கொள்ளும் போது தன்னால் என்ன முடியும், முடியாது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. போட்டிக்காக அவர்கள் செய்யும் பயிற்சியும் முயற்சியும் அவர்களைச் சுறுசுறுப்பாக்குகிறது. செயல்பாட்டைத் தூண்டி வளர்ச்சிக்கு உதவுகிறது. இக்காரணங்களால் போட்டியில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் பங்கேற்பது தான் இன்றியமையாதது என்று தந்தை கூறுகிறார்.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. காட்டில் நடந்த போட்டியின் பெயர் 'பறவைகளுக்கான பாட்டுப்போட்டி' ஆகும்
2. காக்காவின் பாட்டைக் கேட்ட சிங்கராஜா "ஆகா... என்ன சுருதிசுத்தம். அற்புதம்!" எனக் கூறினார்.
3. "பாட்டுராணி" பட்டம் பெற்ற பறவை காக்கா.

**புதிர்களைப் படிப்போம்! விடை காண்போம்! படத்துடன் பொருத்துவோம்!**

1. காகம் 2. குயில் 3. மயில் 4. கிளி 5. சேவல்

***ஆனந்தம் விளையும் பூமியடி***

**சிந்திக்கலாமா?**

**எதனை நாம் தாயாய் போற்றி, கண்ணைப்போல் காக்க வேண்டும்? ஏன்? எவ்வாறு?**

1. வனவிலங்குகள், பறவைகள் வாழும் இடங்களில் உள்ள தாவரங்களை அழிக்காமல் பாதுகாக்க வேண்டும்.
2. வனவிலங்குகளை வேட்டையாமல் இருக்க வேண்டும். ஏனெனில் அவை ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன.
3. அவை உள்ள இடங்களில் பெரிய நீர்த்தொட்டிகள் அமைத்துத் தண்ணீர் ஊற்றி வைக்கலாம்.
4. அவ்வப்போது, அவற்றிக்குத் தேவையான உணவுப்பொருட்களை வாங்கிப் போடலாம். அரசாங்கத்தின் உதவியுடன் வனத்துறையினர் மேலும் பாதுகாப்புப் பணிகளைச் செய்ய வேண்டும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. துன்பம் 2. கும்மி + அடி 3. வருத்தம் 4. கவிஞர் 5. போற்றிடடி - காத்திடடி

**படங்களின் பெயரை எழுதுக. பெயரின் முதல் எழுத்துகளில் உருவாகும் சொல்லுக்குரிய படத்துடன் இணைக்க**

1. கடல், விறகு, தையல்இயந்திரம் - கவிதை 2. மிளகாய், தட்டு, வைக்கோல் - மிதவை
3. உரல், தண்ணீர் குடம், விளக்கு - உதவி 4. மலை, தச்சன், குரங்கு - மதகு

**பாடலில் இடம் பெற்றுள்ள ஒத்த ஓசைச்சொற்களை எழுதுக.**

கும்மியடி, நெஞ்சம் / நெகிழ்ந்ததே, ஆனந்தம் / ஆரம், மலையாய் / வாழும், புகழும் / பூமி, அறிவில் / அறிஞர்கள், இந்தியா / இணைந்து

**பொருத்துக.**

1. பாரதம், தேசம் - நாடு
2. ஆனந்தம், சந்தோஷம் - மகிழ்ச்சி
3. நெஞ்சம், உள்ளம் - மனம்
4. துன்பம், துயர் - இன்னல்
5. தாய், அம்மா - அன்னை

***கணினி உலகம்***

**உரையாடலாம் வாங்க!**

**கணினியின் திரை போன்று செய்து கணினியைப் பற்றிப் பேசுக.**

கணினி நம் உலகைச் சுருக்கி உள்ளங்கையில் கொடுத்துவிட்டது. கணினி வன்பொருள் மற்றும் மென்பொருள் இடையிலான பரிமாற்றத்தின் மூலம் இயங்குகிறது. கணினியின் உள்ளீடு, வெளியீடு கருவிகள் உள்ளன. விசைப்பலகை, சுட்டி போன்றவை உள்ளீட்டுக்கருவிகள், காட்சித்திரை, கணினி அச்சுப்பொறி போன்றவை வெளியீட்டுக் கருவிகள். நாம் கணினிக்கும் கொடுக்கும் தகவல் தாம் தரவுகள். தரவுகள் பதிவு செய்வதைப் பதிவேற்றம் எனவும், தகவல் பெறுவதைப் பதிவிறக்கம் எனவும் அழைக்கின்றோம்.

கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைத்தளம் அல்லது இணையம் எனப்படுகிறது. கணினிகளுக்கு இடையே தகவல் பரிமாற்றம் செய்ய மின்னஞ்சல் பயன்படுகிறது. இப்போது புலனம், முகநூல் கட்டுரை ஆகியவற்றின் மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்யப்படுகிறது. இவற்றை நாம் ஆக்கப் பயன்களுக்கு மட்டும் செயல்படுத்துவோம்.

**சிந்திக்கலாமா?**

**அழகன் புத்தகத்தில் மட்டுமே படிக்க முடியும் என்கிறான். அவன் நண்பனோ கணினியிலும் படிக்கலாம் என்கிறான். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

அழகன் புத்தகத்தில் மட்டுமே படிக்க முடியும் என்று கூறுவது தவறான கூற்றாகும். அவன் நண்பன் கணினியிலும் படிக்கலாம் என்று கூறுவது சரியானதாகும். புத்தகத்தில் படிக்கலாம். ஆனால், புத்தகத்தில் மட்டுமே படிக்க முடியும் என்று கூறவியலாது. ஏனெனில் கணினியின் மூலமாகவும் படிக்கலாம். கணினி நமக்குத் தேவையான அனைத்து கருத்துகளையும் நொடியில் தேடித்தந்து விடுகிறது. அதனால் கணினியில் படிப்பது எளிதானது என்பது என் கருத்து.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. கணினி 2. விசை + பலகை 3. நினைவு + அகம் 4. மின்னஞ்சல் 5. தகவல் பதிவு செய்தல்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. மெரினா கடற்கரை, விமானநிலையம், அண்ணா நூற்றாண்டு நூலகம், உயிர்க்காட்சிச்சாலை, தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஆகியவற்றை கயல்விழி சென்னையில் கண்டுகளித்தாள்.
2. மையச்செயல்பாட்டுப் பகுதி, கட்டுப்பாட்டகம், நினைவகம், உள்ளீடு மற்றும் வெளியீடுகள் ஆகியவை கணினியின் முதன்மைப்பகுதிகளாகும்.
3. கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைத்தளம் அல்லது இணையம் என அழைக்கப்படுகிறது.
4. இணையத்தின் வாயிலாகத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள மின்னஞ்சல் பயன்படுகிறது.

**குறிப்புகளைப் படித்துச் சொற்களைத் தேர்ந்தெடுப்போமா?**

1. திரை 2. தரவு 3. புலனம் 4. வலைத்தளம் 5. பதிவேற்றம்

**கை என்னும் சொல்லை முதலெழுத்தாகக் கொண்டு பல சொற்களை உருவாக்கலாமா?**

1. கைக்குட்டை 2. கைத்தடி 3. கையுறை

**கணினி சம்பந்தப்பட்ட ஆங்கிலச்சொற்களுடன் பொருத்துங்கள்.**

**1. Mouse 2. Monitor 3. Printer 4. Keyboard 5. Whatsapp**

**விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை நிரப்பிக் கடிதத்தை முழுமையாக்குவோம்.**

மதுரை
20.10.2020

அன்புள்ள அத்தை,

நாங்கள் அனைவரும் நலம். அது போல உங்கள் அனைவரின் நலம் அறிய ஆவல்.

அடுத்த வாரம் எங்கள் ஊரில் புத்தகக்கண்காட்சி நடைபெற உள்ளது. அதில் பல்வேறு புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்படும். அறிவு வளர்ச்சிக்கு உதவும் பல்வேறு நூல்களை ஒரே இடத்தில் கண்டு மகிழலாம். கண்காட்சியில் கலந்து கொள்ள கதிரையும் கோமதியையும் அனுப்பினால் தாங்கள் மூவரும் சேர்ந்து புத்தகங்களைப் பார்த்து மகிழ்வோம். பல நூல்களை வாங்கிப் படித்துப் பயன்பெறுவோம்.

எனவே இருவரையும் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
பிரியதர்சினி

பெறுநர் / முகவரி :
திருமதி. பார்வதி சுந்தரம்
218/ 46. சாலை வீடு
திருச்சி - 626 003.

அனுப்புநர் :
த. பிரியதர்சினி
த/பெ. கா. நடராஜன்
21, வ.உ.சி. முதல் தெரு,
மதுரை - 625 016.

## *மலையும் எதிரொலியும்*

**உரையாடலாம் வாங்க!**

**மலைப்பகுதிக்குச் சென்றிருக்கிறீர்களா? உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பேசுக.**

நான் விடுமுறையில் என் குடும்பத்தினருடன் மலைப்பகுதிக்குச் சென்றிருக்கிறேன். கொடைக்கானலுக்குச் சென்றோம். எங்குப் பார்த்தாலும் பச்சைப் பசேல் என்று அடர்ந்த செடி கொடிகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. மலைகளிலிருந்து விழும் அருவி நீர் வெள்ளியைக் காய்ச்சி ஊற்றியதைப் போல உள்ளது. இயற்கை நம் மனதை மிகவும் அமைதியாக வைத்துள்ளது. மலையில் ஏறும் போது வளைந்து வளைந்து செல்வது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. கோபிநாத் தாத்தாவுடன் மலைப்பகுதிக்குச் சென்று கொண்டிருந்தனர்.
2. கோபிநாத் பேசியதை மலை அப்படியே எதிரொலித்தது.
3. கோபிநாத் நான் அன்பு கொண்டவன் என்று சொல்லிருந்தால் மலையும் அவ்வாறு சொல்லி இருக்கும்.
4. நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையும் வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது. மற்றவர்களிடம் அதிகமான நிலையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உன் வாழ்க்கையில் எதிர்பாராமல் நடக்கும் ஒவ்வொன்றும் உன்னுடைய எதிரொலி தான் என்று தாத்தா கோபிநாத்துக்குக் அறிவுரை கூறினார்.

**விடுகதைக்குரிய சரியான படத்தைத் தேர்ந்தெடுப்போமா?**

1. விமானம் 2. நண்டு 3. வால் 4. இடியாப்பம் 5. விமானம்

**குறிப்புகளைப்படி. விடையைக் கண்டுபிடி.**

1. 2. வழக்கு, மழலை 3. 4. சிற்பி, சினம்

## *எழுவாய், பயனிலை அறிவோமா?*

**கீழ்க்காணும் தொடர்களில் எழுவாயைக் கண்டறிந்து எழுதுக.**

1. குழந்தை 2. கண்ணன் 3. பூங்கோதை 4. அண்ணன் 5. பறவைகள் 6. பசு

**கீழ்க்காணும் தொடர்களைப் பயனிலைகளுக்கேற்றவாறு அட்டவணைப்படுத்துக.**

| | | | |
|---|---|---|---|
| பெயர்ப்பயனிலை | : | அவர் சிறந்த மருத்துவர், | அருளரசன் நல்ல மாணவன். |
| வினைப்பயனிலை | : | நேற்று அழகன் ஊருக்குச் சென்றான், | புலி உறுமியது. |
| வினாப்பயனிலை | : | என்னை அழைத்தவர் யார்?, | முக்கனிகள் யாவை? |

## *நீதிநெறி விளக்கம்*

**சிந்திக்கலாமா?**

**ஜீனத் நன்றாகப் படிப்பவள். ஆனால், வகுப்பில் ஆசிரியர் ஏதாவது கேள்வி கேட்டார். பதில் சொல்லத் தயங்குவாள். அவள் கூச்சத்தை எவ்வாறு போக்கலாம்?**

ஜீனத்தின் கூச்சத்தைப் போக்க அவள் அடிக்கடி வகுப்பில் பேச வேண்டும். வகுப்பில் நடைபெறும் செயல்பாடுகளில் கலந்து கொள்ள வேண்டும். பள்ளியில் காலையில் நடைபெறும் வழிபாட்டுக் கூட்டங்களில் திருக்குறள், இன்றைய சிந்தனைக்கு போன்ற ஏதாவது ஒன்றைப் பற்றி பேச வேண்டும். இவ்வாறு பல முறை பேசும்போது அவளுடைய கூச்சம் போய்விடும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. குற்றம் 2. அவை + அஞ்சி 3. இனிமை + நலம் 4. கற்றார்

**பொருள் கூறுக.**

1. அச்சமுற்று 2. உடல் 3. படிக்காதவர் 4. பொருளற்ற ஆரவாரச்சொல் 5. உண்டாதல்

**பிரித்தெழுதுக.**

1. பொருள் + அற்ற 2. பொருள் + செல்வம் 3. வைத்து + கொள்வோம் 4. கல்வி + செல்வம்

**எதிர்ச்சொல் தருக.** 1. வெளியே 2. தவறு 3. அதிகமாக 4. கீழ்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. கல்வி கற்றவர்கள் உடல் நடுக்கமின்றி அவையில் பேசும் இயல்பு கொண்டவர்களாய் இருத்தல்வேண்டும்.
2. கல்வி கற்காதவர்களே பொருளற்ற சொற்களை அவையினர்முன் பேசுபவர்.
3. கற்றவரின் அவை நடுக்கம், கல்லாதவரின் ஆரவாரச்சொற்கள், பிறருக்கு வழங்கப்படாத செல்வம், வறியவரின் ஈகை ஆகியவை பூத்தலின் பூவாமை நன்று என்று நீதிநெறிவிளக்கம் குறிப்பிடுகிறது.
4. நீதிநெறி விளக்கத்தை எழுதியவர் குமரகுருபரர் ஆவார்.
5. மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், காசிக்கலம்பகம் ஆகியவை குமரகுருபரர் இயற்றிய நூல்களாகும்.

**முதலெழுத்து ஒன்றிவரும் சொற்களைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.**

1. அவையஞ்சி - அவையஞ்சா 2. கல்வியும் - கல்லார் 3. பூத்தலின் - பூவாமை

**குறிப்புகளைப் படி. சொல்லிருந்தே சொல்லைக் கண்டுபிடி.**

1. வனம் 2. மலர் 3. கொடை 4. வால் 5. பசு

**பின்வரும் வினாக்களுக்கு விடுகதையைக் கண்டுபிடிக்க.**

1. 2. 3. 4.

**கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வினா எழுதி மகிழ்க.**

1. அவன் என்ன படித்தான்? 2. இது என்ன பாடம்? 3. அவள் ஏன் சென்றாள்?

**லை, கை போன்ற எழுத்துகளில் முடியும் சொற்களை எழுதுக.**

லை : சிலை, மலை, தலை, கலை, வலை

கை : சிகை, பகை, புகை, காக்கை, யாக்கை, நகை

**சங்கு சக்கரத்தைச் சுழற்றிக் கல்வியின் பெருமைகளை உணர்த்தும் சொற்றொடர்களை முறையாக எழுதுக.**

1. கல்வி கண் போன்றது. 2. கல்விக்கு நிகர் எதுவுமில்லை. 3. கல்வியே அழியாச்செல்வம்.

*உறவுமுறைக் கடிதம்*

**உரையாடலாம் வாங்க!**

**உறவுமுறைக் கடிதத்தில் உள்ள செய்திகளை சொந்த நடையில் கூறுக.**

பள்ளியில் நடைபெற்ற பாராம்பரிய விளையாட்டு விழா பற்றிய செய்திகள்.

பாண்டி ஆட்டம், கபடி முதலிய வெளி விளையாட்டுகளும் தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி முதலிய உள் விளையாட்டுகளும் நம் பாரம்பரிய விளையாட்டுகளாகும். இவை உடலுக்கும் அறிவுக்கும் ஆற்றல் தரும்.

பாண்டி ஆட்டம் ஒருமுகத்திறன், கூர்மைப்பண்பு, குதிதிறன் ஆகியவற்றைத் தருகிறது. பல்லாங்குழி சிந்தனையைச் சிதறாமல் வளர்க்கும் ஆற்றல் மிக்கது. இருப்பவரிடம் இருந்து இல்லாதவர்க்குக் கொடுக்கும் நற்பண்பை உணர்த்தும்.தாய விளையாட்டின் போது ஏற்றத்திற்கான நல்ல வழிகளையும் இறக்கத்திற்கான தீய வழிகளையும் தெரிந்து கொள்ளலாம். வாழ்வின் அவசியமான ஒழுக்கத்தை அறிந்து கொள்ளும் சரியானவிளையாட்டு ஆகும்.

ஐந்தாங்கல், கல்லாட்டம் ஆகிய விளையாட்டுகள் சீனா, பர்மா போன்ற நாடுகளிலும் விளையாடப்படுகிறது. கற்களைத் தூக்கிப் போட்டு விளையாடும் போது கவனச்சிதறல் வராமல் மனம் ஒருமுகப்படுகிறது. அடுத்த கல்லில் விரல் படாது எடுத்த ஆடுகையில் விரலின் பங்கோடு எண்ணம் சரியாகப் பங்காற்றுகிறது. கைகளுக்கு வலிமை சேர்க்கிறது. தமிழக விளையாட்டுகள் நம் உடல் வலிமையையும் உள்ள வலிமையையும் கூட்டுகிறதுஎன்பதை அனைவரும் அறியலாம்.

**சிந்திக்கலாமா?**

**நவீன் தான் நினைப்பதையெல்லாம் தன் மாமாவிடம் சொல்ல நினைப்பான். ஆனால், அலைபேசியில் பேசும்போது அத்தனையும் மறந்து விடுவான். குழலி, தான் பேச நினைப்பதையெல்லாம் ஒன்றுவிடாமல் கடிதத்தில் எழுதித் தன் அக்காவுக்கு அனுப்புவாள். மேற்கண்ட சூழல்கள் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? எது சிறந்தது என நீ கருதுகிறாய்?**

குழலி, தான் பேச நினைப்பதையெல்லாம் ஒன்றுவிடாமல் கடிதத்தில் எழுதித் தன் அக்காவுக்கு அனுப்புவாள். இச்சூழல் தான் சிறந்தது. ஒரு நாளில் நாம் பலவிதமான நிகழ்வுகளைக் காண்கிறோம். அவற்றைக் காணும் போது நம் மனம் அவற்றைப் பற்றிச் சிந்திக்கும். எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்வது என்பது இயலாது. அதற்குக் குழலி செய்வதுதான் சிறந்தது.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நன்மை+ பண்பு 2. கபடி 3. அண்மைக்காலம்

**வினாக்களுக்கு விடையளிக்க.**

1. பாண்டி ஆட்டம், கபடி, தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி ஆகியவை தமிழகப் பாரம்பரிய விளையாட்டுகள் ஆகும்.
2. தாயம், ஐந்தாங்கல், பல்லாங்குழி
3. தமக்குப் பிடித்தமான, இனிய செயலைச் செய்ய நமக்கு யாரும் கூலி கொடுக்க வேண்டிய தேவை இல்லை.

**உங்களுக்குப் பிடித்த விளையாட்டுகளைக் கட்டத்தில் கண்டறிந்து எழுதுக.**

கிளித்தட்டு, காயா பழமா, பல்லாங்குழி, பம்பரம், அம்மானை, தாயம், ஆடுபுலி, கோலி, ஐந்தாங்கல், கிட்டிப்புள்

**உரைநடைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

1. விளையாட்டும் பொழுதுபோக்கும் ஓரினத்தின் பண்பாடு வரலாற்றில் குறிப்பிடப்படுவன ஆகும்.
2. கூரிய கொம்புகளை உடைய காளைகளை அடக்குவது ஏறுதழுவுதல் எனப்படுகிறது.
3. இளையவர் ஒ முதியவர் 4. ஏறுதழுவுதல் முல்லை நிலத்துடன் தொடர்புடையது.
5. ஏறுதழுவுதல் என்பது வெளியரங்க விளையாட்டு.

*காவ்யா*

**உரையாடலாம் வாங்க!**

**நீங்கள் அறிந்திருக்கும் புதிர்கதைகளுள் ஒன்றை வகுப்பில் பகிர்ந்து கொள்க.**

ஓர் ஊரில் விறகுவெட்டி ஒருவன் இருந்தான். அவன் மிகவும் ஏழ்மையில் இருந்தான். அவனுடைய அப்பாவிற்குக் கண் தெரியாது. அவனுக்குத் திருமணம் ஆகி நீண்ட நாட்களுக்குப் பிறகும் குழந்தை இல்லை.எப்போதும் அவன் கவலையுடன் இருப்பான். ஒருநாள் ஒரு மரத்தடியில் அமர்ந்து கொண்டு தன் வறுமையை எண்ணியபடியே உறங்கிவிட்டான். கொஞ்சநேரம் உறங்கியபின் விழித்தெழுந்தான். அடுத்த வேலை உணவிற்கு விறகுவெட்டி எடுத்துச் சென்றால் தான் என்ற நிலைமை. சுறுசுறுப்பானான். மரத்தை வெட்ட தன் வாளை எடுத்தான். அப்போது அம்மரம் “விறகு வெட்டியே நில்! என்னை வெட்டாதே! நான் ஓர் அதிசயமரம். என் நிழலில் யார் அமர்கிறார்களோ அவர்களுக்கு உதவி செய்வேன். உனக்கு என்ன வரம் வேண்டும் கேள். நான் தருகிறேன். ஆனால் ஒரு வரம் தான் கேட்க வேண்டும்” என்று கூறியது.விறகுவெட்டி எனக்கு என்ன கேட்பது என்று தெரியவில்லை. வீட்டிற்குச் சென்று என் குடும்பத்தினரிடம் கேட்டு நாளை வந்து கேட்கிறேன் என்றான். மரமும் சரி என்று கூறியது. விறகுவெட்டி வீட்டிற்குச் சென்ற நடந்தவற்றைக் கூறினான்.

விறகுவெட்டியின் தந்தை தனக்குப் பார்வையில்லாமல் மிகவும் சிரமப்படுவதாகக் கூறினார். தாய் வீடு பெரிய மாடி வீடாக இருக்க வேண்டும் என்று கூறினார் மனைவி. நமக்குக் குழந்தை வேண்டும் என்று கூறினாள். மூவருடைய தேவையை எவ்வாறு ஒரு வரத்தினால் பூர்த்தி செய்வது என்று சிந்தித்தான் விறகு வெட்டி.அடுத்தநாள் விறகுவெட்டி விடியற்காலையில் எழுந்தான். காட்டிற்குச் சென்று அந்தஅதிசய மரத்திடம் ஒரு வரம் கேட்டான். மரமும் கொடுத்தது. விறகு வெட்டியும் மகிழ்ந்தான். அவன் கேட்ட ஒரு வரம் என்ன? என் மகனை நான் பள்ளிக்கு அழைத்துச் செல்லும் காட்சியை என் பெற்றோர் வீட்டு மாடியிலிருந்து பார்க்க வேண்டும் என்பது தான் விறகுவெட்டி கேட்ட வரம். தந்தைக்குப் பார்வை கிடைத்துவிட்டது, தாய் கேட்டதைப் போல் மாடி வீடு கிடைத்தது. அவனுக்கு மகனும் பிறந்து விட்டான்.

**சிந்திக்கலாமா?**

**இக்கதையில் வரும் அண்ணனைப் போல் நீ இருந்தால், தம்பிக்கு என்ன செய்திருப்பாய்? கூறுக.**

இக்கதையில் வரும் அண்ணனைப் போல் நான் இருந்தால் என் தம்பிக்கு நல்லதைச் செய்வேன் பசுவை அவனிடம் கொடுப்பேன். மேலும் அவனைத் தனியே இருக்க வேண்டாம். என்னுடன் சேர்ந்தே இரு என் கூறுவேன்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** :

1. நாள்தோறும் 2. பனி + சறுக்கு 3. வேட்டைநாய்

**வினாக்களுக்கு விடையளி**

1. தம்பி தான் ஓராண்டு நிலத்தில் உழைத்தவர் ஆவார்.
2. புதிருக்குச் சரியாக விடையளித்தவர் தம்பி தான்.
3. ஊர்த்தலைவர் பசுவை தம்பிக்குக் கொடுத்தார்.
4. காவ்யா ஊர்த்தலைவருக்கு ஒரு சிட்டுக்குருவியைப் பரிசாக அளித்தாள்.

**எதிர்ச்சொல் தருக.**

1. நிறைய 2. தடித்த 3. முடியாது 4. மெதுவாக 5. இளைத்த

**தமிழோடு விளையாடலாம்**

1. புதையல் - புதை, தை, புயல், தையல், தபு, புல்,
2. விடுகதை - விடு, கதை, விதை, கடு, கவிதை, தவிடு

**சொல்லுக்குள் சொல் கண்டுபிடி.**

**கொடுக்கப்பட்ட சொல்லின் பொருள் கட்டத்திலுள்ள எழுத்துகளுள் ஒளிந்திருக்கிறது. கண்டுபிடித்து எழுதுக.**

1. நூறு 2. ஓவியம் 3. விண்மீன்